*கவனிக்க.- 2016.07.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1975 - 2016 ජූලි මස 08 වැනි සිකුරාදා - 2016.07.08**

*1975 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1110 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.***- *ஜனகரலிய கலாச்சார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, மே மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூலை மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*''ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.''*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மத்திய மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி அமையங்களின் வருமானப் பரிசோதகர் சேவையின் தரம் III இற்கான வருமானப் பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த/ வரையறுத்த போட்டிப் பரீட்சை - 2016

மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி அமையங்களில் நிலவும் வருமானப் பரிசோதகர் சேவையின் III ஆவது தரத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கென மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுள்ள பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பரீட்சை.**- தகுதியானோரைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணையத்தினால் ஒழுங்கு செய்யப்படும் அல்லது ஆணையத்தின் சார்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். இந்தப் பரீட்சையைக் கண்டி நகரில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. **நியமிக்கப்படுவோரது எண்ணிக்கையும் நியமனம் செல்லுபடியாகும் திகதியும்.**- நியமனம் செல்லுபடியாகும் திகதி உள்ளூராட்சி ஆணையாளரால் தீர்மானிக்கப்படும். நிலவும் வெற்றிடங்களில் எவற்றையேனும் அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உண்டு.

2. **சேவைக்கான நிபந்தனைகள் :**

(i) மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் வருமானப் பரிசோதகர் சேவைக்கென ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு பற்றிய விதிமுறைகளுக்கென விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், குறித்த விதிமுறைகளில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் உட்படும் வண்ணம் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வருமானப் பரிசோதகர் சேவையின் III ஆம் தரத்தில் நியமனம் செய்யப்படுவர்.

(ii) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை.

(iii) பதவிக்கான ஆட்சேர்ப்புக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் நியமனம் பெறும் திகதியிலிருந்து மூன்று வருட காலம் தகுகிகாண் சேவைக் காலத்துக்கு உட்படும் வண்ணம் சேவையில் நியமிக்கப்படுவர்.

(iv) தகுதிகாண் காலம் முடிவடைந்ததும் பதவியில் நிரந்தமாகத் தவறுவோர் எனின், அவர்களது சேவையை இடைநிறுத்தவேண்டி ஏற்படும்.

(v) பொ. நி. சு. 01/ 2014 இனது ஏற்பாடுகளுக்கமைய அனைத்து அலுவலர்களும் சேவையில் இணைந்து கொண்ட அரச கரும மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கரும மொழி தொடர்பான தகுதிகாண் புலமையைச் சேவையில் இணைந்த 5 ஆண்டுகளுக்குள் பெற்றுக்கொள்ளல் வெண்டும். அரசகரும மொழிகள் திணைக்களம் நடாத்தும் ஆரம்பத் தேர்ச்சி மட்ட மொழிப் பாட நெறித் தேர்வில் சித்தியடைதல் வேண்டும். (பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய தேர்ச்சி மட்டம் தொகுதி 3 ஆகும்). நியமனத் திகதியிலிருந்து 5 வருட காலத்துக்குள் குறிப்பிட்ட இரண்டாவது மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாத அலுவலர்களது சம்பள உயர்ச்சி, தகுதியைப் பெற்றுக்கொள்ளும் வரை இடைநிறுத்தி வைக்கப்படும்.

(vi) தெரிவுசெய்யப்படும் அலுவலர்கள் மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றும் நிபந்தனைக்கு உட்படுவதுடன், மூன்று வருடகாலத் தகுதிகாண் சேவை நிறைவடையும் வரை இடமாற்றம் தொடர்பாக முன்வைக்கப்படும் எந்தவொரு வேண்டுகோளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(vii) தாபனக்கோவை, நிதிப் பிரமாணங்கள், மாகாண சபைகள், நிதிச்சட்ட விதிகள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் இடைக்கிடை அரசும், மத்திய மாகாண சபையும் விதிக்கும் கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டது.

(viii) வெளிக்களக் கடமைகளில் ஈடுபடும் சந்தரப்பங்களின்போது உத்தியோகச் சீருடையைத் தரித்திருத்தல் வேண்டும்.

(ix) திணைக்களத் தலைவர்/ தாபனத் தலைவர் விதிக்கும் பட்சத்தில் பயணங்களுக்கென மோட்டார் சைக்கிளொன்றை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

(x) திணைக்களத் தலைவர்/ தாபனத் தலைவர் விதிக்கும் பட்சத்தில் விசேட கொண்டாட்டங்கள், கண்காட்சிகள் போன்ற சந்தர்ப்பங்களின்போது வருமானத்தைச் சேகரித்தல்/ மேற்பார்வை செய்தல் என்பவற்றுக்கென பகல் இரவு இரண்டிலும் சேவையில் ஈடுபடுதல் வேண்டும்.

*3. **சம்பள அளவுத் திட்டம்.**- வருமானப் பரிசோதகர் சேவையின் III ஆம் தரத்துக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டம்.- பொது நிருவாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் MN 01 - 2016 இற்கமைய மாதாந்தம் ரூபா 27,140 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - 45,540 ஆகும். எனினும் குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கு அமைய உங்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.*

*4. **தகைமைகள்** :*

(i) ***அடிப்படைத் தகைமைகள்.***- ஒவ்வொரு விண்ணப்பதாரரும்-

*(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*

*(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு, அதாவது 2016.08.05 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது மாகாண அரசாங்க சேவையின் உள்ளூராட்சி அமையங்களில் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)*

*(இ) சிறந்த நன்னடத்தை உடையவராகவும் நல்ல உடல் ஆரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.*

*(ஈ) ஏதேனும் சமயப் பிரிவொன்றில் திருநிலைப்படுத்தப்பட்டவராக இருப்பவருக்கு இந்தப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி இல்லை.*

*(உ) விண்ணப்பதாரர்கள் மத்திய மாகாணத்துக்குள் நிரந்தர வதிவைக் கொண்டோராக இருத்தல் வேண்டும். (விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு ஆகக்குறைந்த உடன் முன்னரான 3 வருடங்கள் தொடர்ச்சியான நிரந்தர வதிவை வாக்காளர் பெயர்ப்பட்டியல் மூலம் நேர்முகப் பரீட்சையின்போது உறுதி செய்தல் வேண்டும்.)*

*(ஊ) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் தண்டனை வழங்கப்படாத ஒருவராக இருத்தல் வெண்டும்.*

***குறிப்பு.***- *இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவோர் தங்களது கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை உள்ளூராட்சி ஆணையாளர் வேண்டிக்கொள்ளும் பட்சத்தில் முன்வைப்பதற்கெனத் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். பரீட்சைப் பெறுபேறுகளுக்கெனக் காத்திருப்போர் இதற்கென விண்ணப்பிக்க முடியாது.*

(ii) ***கல்வித்தகைமைகள்.***- திறந்த ஆட்சேர்ப்பு :

(i) *இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழி, கணிதம்/ எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம் என்ற பாடங்கள் உள்ளிட்ட 5 திறமைச் சித்திகளுடன் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியுடனான 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். அத்துடன்,*

(ii) *கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரப்) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின்கீழ் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். (பொது சாதாரணப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) அல்லது பழைய பாடத்திட்டத்தின்கீழ் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.*

வரையறுத்த ஆட்சேர்ப்பு :

(i) *இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்/தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழி, கணிதம்/ எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம் என்ற பாடங்கள் உள்ளிட்ட 5 திறமைச் சித்திகளுடன் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியுடனான 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். அத்துடன்,*

(ii) *மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி அமையமொன்றில் பின்வரும் நிரந்தரப் பதவியொன்றில் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று உள்ளவாறு 5 வருட காலத் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் :*

- *வர்த்தக நிலையங்களது கட்டுப்பாட்டாளர்*
- *சந்தைக் கட்டுப்பாட்டாளர்*
- *வருமான மேற்பார்வையாளர்*
- *விளையாட்டு மைதானப் பொறுப்பாளர் / கட்டுப்பாட்டாளர்*
- *வாரச் சந்தைப் பொறுப்பாளர்/ கட்டுப்பாட்டாளர்*

திருப்திகரமான சேவைக்காலம் எனப்படுவது குறித்த காலத்துக்குள் சாதாரண மட்டத்தில் கரும அடைவைக் காட்டியிருத்தல், இடைநிறுத்தம் அல்லது தடுத்து வைத்தல் அல்லது பிற்போடுதல் இல்லாதவாறு உரிய வகையில் சம்பள உயர்ச்சிகளைச் சம்பாதித்துள்ள, எச்சரிக்கை தவிர்ந்த ஏனைய எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படாத சேவைக் காலத்தைக் குறிப்பிடும்.

5. **பரீட்சைக் கட்டணம்.**- இந்தப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் 600 ரூபா ஆகும். இந்தத் தொகையை மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளரது வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவில் இடும் வகையில் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மத்திய மாகாணத்தின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட உங்களது பெயரிலான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டி அனுப்பி வைத்தல் வேண்டும். இந்தப் பரீட்சைக்கெனச் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கப்பட மாட்டாது. (பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது நன்மை பயக்கும்) மேலும், பரீட்சைக் கட்டணமாக முத்திரைகளோ அல்லது காசுக் கட்டளைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவிலான காகிதத்தில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களைத் தெளிவாகத் தமது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். 1 தொடக்கம் 3 வரையிலான தகவல்களை முதல் பக்கத்திலும் 4 தொடக்கம் 8 வரையிலான தகவல்களை இரண்டாம் பக்கத்திலும், 9 முதல் 12 வரையிலான தகவல்களை மூன்றாம் பக்கத்திலும், 13 ஆவது தகவலை நான்காவது பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தை தாமே தயாரித்துக்கொள்ளல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தைத் தழுவியிராத அல்லது பூரணமற்ற வகையில் தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். (பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது நன்மை பயக்கும்).

(ஆ) திறந்த / வரையறுத்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை 2016, ஓகத்து மாதம் 5 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் **உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், பள்ளேகல, குண்டசாலை** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(இ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தரம் III வருமானப் பரிசோதகர் ஆட்சேர்ப்புக்கான திறந்த/ வரையறுத்த போட்டிப் பரீட்சை - 2016" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தற்போது அரச/மாகாண அரசாங்க சேவையின் பதவியிலுள்ள விண்ணப்ப தாரிகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு வகையிலும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். தபாலில் காணாமற்போன மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் தொடர்பில் இந்தத் திணைக்களம் வகை கூறாது. இவை தொடர்பில் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. மேலும், பரீட்சையில் சேர்த்துக்கொள்வதற்கான தகுதியாக அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பம் செய்வது திறந்த போட்டிக்கா அல்லது வரையறுத்த போட்டிக்கா என்பதனை விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பிக்கும் மாவட்டத்தைக் குறிப்பிடும்போது விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள மாவட்டத்தின் குறியீட்டு இலக்கத்தையே குறிப்பிடுதல் வேண்டும்.

**கண்டி - 01 மாத்தளை - 02 நுவரெலியா - 03**

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்.**- விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அதிகாரம் பெற்ற ஒருவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களது கையொப்பத்தைக் குறித்த திணைக்களத்தின் தலைவர் அல்லது அதற்கான தகுதியைக் கொண்டுள்ள அலுவலரும், ஏனைய விண்ணப்பதாரிகளது கையொப்பங்களை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி அல்லது முப்படைகளின் பதவிநிலைப் பதவியொன்றை வகிக்கும் ஒரு அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் 2,40,360 ரூபா அல்லது அதற்குக்கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது முப்படையின் பதவிநிலை அதிகாரி அல்லது பொலிஸ் அதிகாரி ஒருவரால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

**குறிப்பு.**- பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டைத் தவிர வேறெந்த ஆவணங்களையோ அல்லது பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் கூடாது.

7. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) உரிய முறையில் விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அல்லது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுபவர் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவ்வாறு தோற்றும் முதலாவது நாளில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அட்டையை முன்வைக்கத் தவறும் பரீட்சார்த்திக்குப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(இ) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதல் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதுதல் கூடாது.

(ஈ) பரீட்சையை நடத்துவது தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழு/ பரீட்சைகள் ஆணையளர் நாயகம் விதிக்கும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கப் பரீட்சார்த்திகள் உட்படுவர். இந்த விதிமுறைகளை மீறுவோர் மீது அரச சேவைகள் ஆணைக்குழு/ பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விதிக்கும் தண்டனைகளுக்கு உட்பட நேரிடும்.

8. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்.**- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் நிரூபித்தல் வேண்டும். அதற்கெனப் பின்வருவனவற்றிலொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்.**- பரீட்சார்த்தி ஒருவருக்குத் தகைமை இல்லையெனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகின்ற போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் அவரது பரீட்சார்த்தத் தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது அறிந்துகொண்டே பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளார் என்றோ அல்லது சரியான தகவலொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றோ தெரியவருமாயின், அவரது சேவை முன்னறிவித்தல் எதுவுமின்றி முடிவுறுத்தப்பட இடமுண்டு.

10. **பரீட்சிக்கும் முறையும் பாடத்திட்டமும் :**

(i) *திறந்த போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம்.*- பின்வரும் பாடங்களுக்கென நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையின் மூலமும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமும்.

| *பாடம்* | *பாடத்திட்டம்* | *காலம் (மணி)* | *மொத்தம்* |
|---|---|---|---|
| மொழி இயலுமை | இந்த வினாப்பத்திரம் விண்ணப்பதாரியின் கருத்து வெளிப்பாட்டுத் தன்மை, விளங்கிக் கொள்ளும் ஆற்றல், எளிய இலக்கணப் பயன் பாடு பற்றிய அறிவு என்பவற்றைப் பரிசோ திக்கும் வினாக்களைக் கொண்டமைந்தது. | 1 1/ 2 | 100 புள்ளிகள் |
| பொது உளச்சார்பு | இந்த வினாப்பத்திரம் விண்ணப்பதாரியின் கணித இயலுமை, தர்க்கிக்கும் இயலுமை, பொது அறிவை அளவிடும் வகையில் தயாரிக் கப்பட்ட விடயங்களைக் கொண்டமைந்தது. | 1 | 100 புள்ளிகள் |

(ii) வரையறுத்த போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம் :

| *பாடம்* | *பாடத்திட்டம்* | *காலம் (மணி)* | *மொத்தம்* |
|---|---|---|---|
| மதிநுட்பப் பரீட்சை | இந்த வினாப்பத்திரம் விண்ணப்பதாரரது தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை, துரிதமாகவும் சரியாகவும் தீர்மானம் எடுக்கும் வல்லமை என்பவற்றை உள்ளடக்கியது. | 1 | 100 புள்ளிகள் |
| பொது அறிவு | உள்நாட்டு, வெளிநாட்டு மட்டத்தில் முக்கியம் வாய்ந்த நடைமுறைச் சம்பவங்கள் தொடர்பில் விண்ணப்பதாரியின் விடய அறிவைப் பரீட் சிக்கும் வினாப்பத்திரம். | 1 1/ 2 | 100 புள்ளிகள் |

(ஆ) பரீட்சையில் சித்தியடைவதற்கென எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு வினாப்பத்திரத்தினதும் உரிய புள்ளிகளில் ஆகக் குறைந்தது நாற்பது (40%) சதவீதப் புள்ளிகளையும், முழு மொத்தப் பரீட்சையிலும் ஆகக் குறைந்தது ஐம்பது (50%) சதவீதப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்டுள்ள புள்ளிகளின் தொடரொழுங்கின்படி வெற்றிடங்களது எண்ணிக்கையின் இருமடங்கு எண்ணிக்கையினர் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவாகும் தகுதியைப் பெறுவர். எழுத்துப் பரீட்சையின் பின்னர் அறிவிக்கப்படும் ஒரு தினத்தில் நேர்முகத்தேர்வு நடத்தப்படும். விண்ணப்பதாரர்களது கல்வித் தகைமைகள், சேவை அனுபவம் என்பவற்றைப் பரிசோதிப்பதற்கென்றே நேர்முகத்தேர்வு நடத்தப்படுவதுடன், நேர்முகத்தேர்வுக்கெனப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

11.**நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்படும் முறை.**- நிலவும் வெற்றிடங்களது எண்ணிக்கையின் எழுபது (70%) சதவீதம் திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலும், முப்பது (30%) சதவீதம் வரையறுத்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். போட்டிப் பரீட்சைகளது கூடிய பெறுபேற்றுப் புள்ளித் தொடரொழுங்கின்படி அழைக்கப்படும் நேர்முகத் தேர்வில் தகைமைகள் பரிசோதிக்கப்பட்ட பின்னர், ஆட்சேர்ப்பு தொடர்பான அரசின் கொள்கைகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றைப் பின்பற்றி வெற்றிடங்கள் நிரப்பப்படும். நியமனங்களை வழங்கும்போது வழங்கப்படும், இறுதியாகப் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தின் போது நேர்முகத் தேர்வில் கல்வி மற்றும் துறை சார்ந்த தொழிற் தகைமைகளைக் கருத்திற் கொண்டு கூடிய தகைமையைப் பெறுபவர் தெரிவுசெய்யப்படுவார்.

12.10 அ. பந்தியின் கீழ் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களது பெயர்களைக் கொண்ட பெறுபேறு பட்டியல் அரச சேவைகள் ஆணையத்தினால்/ பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்குத் தனிப்பட்ட ரீதியில் அனுப்பி வைக்கப்படும். அல்லது அரச சேவைகள் ஆணையத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும். (www.psc.cp.gov.lk)

13. மேற்காட்டிய விதிமுறைகளுக்குள் அகப்படாத அம்சங்கள் தொடர்பில் எழும் பிரச்சினைகள் தொடர்பில் மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது தீர்மானமே இறுதியானதாகும்.

14. இந்த அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

பி. எச். என். ஜயவிக்ரம,
உள்ளூராட்சி ஆணையாளர்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
மாகாண சபைக் கட்டடத் தொகுதி,
பள்ளேகல, குண்டசாலை,
2016, யூன் 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்துக்கு மட்டும்)

**மத்திய மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி அமையங்களின் வருமானப் பரிசோதகர் சேவையின் தரம் III இற்கான வருமானப் பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த/வரையறுத்த போட்டிப் பரீட்சை - 2016**

விண்ணப்பிக்கும் மாவட்டமும் குறியீட்டு இலக்கமும் :

விண்ணப்பிப்பது : வரையறுத்த / திறந்த
(வரையறுத்த - L / திறந்த - O என உரிய கூட்டில் குறிப்பிடுக.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
(சிங்களம் - S / தமிழ் -T/ ஆங்கிலம் - E என உரிய கூட்டில் குறிப்பிடுக.)

1. (i) முதலெழுத்து இறுதியில் வரும் வண்ணம் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : PERERA A. B. C.)

(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iii) முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (i) அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ii) நிரந்தர வதிவிட முகவரி (சிங்களத்தில் / தமிழில்) :----.

(iii) அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அரச/மாகாண அரச சேசையில் உள்ளோர் அவர்களது அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும்.)

(iv) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.

(v) பிரதேச செயலாளர் பிரிவு :----.

(vi) மத்திய மாகாணத்துக்குள் வசிப்பது எப்போதிலிருந்து ? :----.

3. (i) பால் நிலை : ஆண் / பெண் : ☐

(ஆண் - M பெண் - F என உரிய கூட்டில் குறிப்பிடுக)

(ii) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

(iii) விவாக நிலை : ☐

(திருமணமானவர் -M திருமணமாகாதவர் - S என உரிய கூட்டில் குறிப்பிடுக)

(iv) தொலைபேசி இலக்கம் : ..........................................................................................

(v) பிறந்த திகதி : ஆண்டு : ..................... மாதம் : ........................... திகதி : ........................

(vi) 2016.08.05 ஆந் திகதியன்று உள்ளவாறான வயது :
வருடங்கள் : ...............மாதங்கள் : ........... நாட்கள் ............

4. இனம் :----. ☐

5. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :-

(i) க. பொ. த. (சாதா. தரம்) பரீட்சை :
வருடம் : ................. சுட்டெண்: ................................................

| தொடர் இலக்கம் | பாடங்கள் | சித்தி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை :
வருடம் : ................. சுட்டெண்: ................................................

| தொடர் இலக்கம் | பாடங்கள் | சித்தி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(iii) பெற்றுக்கொண்டுள்ள பட்டம் / டிப்ளோமா பற்றிய விபரங்கள் :

| சித்தியடைந்துள்ள பட்டம்/ டிப்ளோமா | பல்கலைக்கழகம் / நிறுவகம் | பட்டம் / டிப்ளோமா செல்லுபடிக் காலம் |
|---|---|---|
| | | |

6. ஏனைய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் :
.................................................................................................................................................
.................................................................................................................................................
.................................................................................................................................................

7. (i) ஏதும் சட்ட விரோதச் செயல்களுக்காக நீங்கள் நீதிமன்றத்தின் மூலம் தண்டனை விதிக்கப்பட்டவரா?

ஆம் / இல்லை

(ii) ஆம் எனின், விபரம் தருக :
.................................................................................................................................................
.................................................................................................................................................

8. விண்ணப்பதாரி தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் தொழில் புரிபவராயின்,

(i) தற்போது வசிக்கும் பதவி :----.
(ii) தற்போதைய தரம் :----.
(iii) சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் நிர்தரமாக்கப்பட்ட திகதி :----.
(iv) சேவை நிலையத்தின் பெயரும் முகவரியும் :----.
(v) சேவை நிலையத்தின் தொலைபேசி இலக்கம் :----.

9. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று உள்ளவாறு 5 வருடங்களுக்கான திருப்திகரமான சேவைக்காலம் நிறைவு செய்யப்பட்டுள்ளதா ?
அவ்வாறெனின்,

| வருடம் | கரும அடைவு மட்டம் | சம்பள உயர்ச்சி பெறப்பட்டுள்ளது / இல்லை / இடை நிறுத்தப்பட்டுள்ளது |
|---|---|---|
| | | |

10. (i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :
(ii) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :

| பற்றுச் சீட்டு கழன்றுவிடாத வண்ணம் அதனை இந்தக் கூட்டினுள் ஒட்டுக |
|---|

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்த வரையில் யாவும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய என்னால் பிழையான தகவல்கள் தரப்பட்டிருப்பின், பரீட்சைக்கு முன்னர் அல்லது பின்னர் எனது பரீட்சார்த்தத் தகைமை அரத்துச் செய்யப்பட முடியும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டுபிடிக்கப்படின் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையுயும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற ................................................................ எனும் முகவரியில் வசிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் .................................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், குறித்த பற்றுச்சீட்டு சரியாக ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையாப்பம்

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.)

(தற்போது அரச / மாகாண அரச சேவையில் பதவி வகிப்போருக்கு மட்டுமே பொருந்தும்)

13. திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................... என்பவர் ............. .................................................. என்ற பதவியில் ............................... ஆந் திகதி முதல் ..................................... .......... அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார் என உறுதிப்படுத்துகின்றேன். அவரால் முன்வைக்கப்பட்டுள்ள விபரங்கள் அவரது தனிப்பட்ட கோவையுடன் செவ்வை பார்க்கப்பட்ட தெனவும், அவை சரியானவை எனவும், இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். தற்போது அவரது சேவை மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும், கடந்த அண்மித்த 5 ஆண்டுகளுக்குள் அனைத்து சம்பள உயர்ச்சிகளும் உழைக்கப்பட்டுள்ளதெனவும், மத்திய மாகாண வருமானப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான அனைத்துத் தகைமைகளும் அவரிடம் உள்ளன எனவும், பதவிக்கெனத் தெரிவுசெய்யப்படின், அவரைத் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.)

7-528

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.